THE TAMIL JOURNAL

**மொழியியல் துறை,**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,**
**தமிழ் இணையக் கழகம், தமிழ்நாடு**
**தமிழ் இதழ், கனடா**
**மற்றும்**
**தமிழ்அறித நுட்பியல் உலகாயம், இலங்கை**

**ஆகியோர் இணைந்து நடத்தும்**

# தமிழ் இணையம் -2023

## ஒரு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம்

*கருத்தரங்கம் அக்டோபர் இறுதி வாரத்தில் நடைபெறும். நாள் பின்னர் அறிவிக்கப்படும்*

*நிகழிடம்*

*மொழியியல் துறை*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை – 625 021*

அன்புள்ள கணினித் தமிழ் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கணினித் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் வணக்கம்.

தமிழ் இணையக் கழகம் கடந்த மார்ச் 2020 லிருந்து இணையத்தமிழ்ச் தொடர் சொற்பொழிவுகளை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக 2022-ல் கணினித் தமிழ் சார்ந்து சொற்பொழிவாற்றிய பேராளர்களின் கட்டுரைகளை தொகுத்து நூலாக்கம் செய்யப்பெற்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற 'தமிழ் இணையம் 100' என்ற விழாவில் (ISSN) இதழாக வெளியிடப்பட்டது. மேலும் கணினித்தமிழ் ஆய்வில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு விருதும் வழங்கி சிறப்பித்தது.

தொடர்ச்சியாக இந்த ஆண்டும் 'தமிழ் இணையம் - 2023' என்னும் பொருண்மையில் மொழியியல் துறை, மதுரைக் காமராசர் பலகலைக்கழகம், மதுரை; தமிழ் இணையக் கழகம், தமிழ்நாடு; தமிழ் இதழ், கனடா மற்றும் தமிழ்அறித நுட்பியல் உலகாயம், இலங்கை இணைந்து ஒரு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கினை அக்டோபர் இறுதி வாரத்தில் நடத்துகிறது. இக்கருத்தரங்கிற்கு கணினித்தமிழ் சார்ந்த கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. இக்கருத்தரங்கிற்காகப் பெறப்படும் கட்டுரைகள் அனைத்தும் தொகுத்து (ISSN எண்ணுடன்) கனடாவிலிருந்து வெளிவரும் 'தமிழ் இதழில்' வெளியிடப்படும். எனவே கணினித்தமிழ் குறித்த கட்டுரைகளை பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் 5 முதல் 8 பக்கங்களுக்கு மிகாமல் அனுப்ப வேண்டுகிறோம்.

கட்டுரைகள் அமையப் பெறும் பொருண்மைகள்

- பேச்சுத் தொழில்நுட்பம்
- எழுத்துத் தொழில்நுட்பம்
- தரவகம்
- மொழித் தொழில்நுட்பம்
- கணினி மொழியியல்
- சாட் ஜீபிடி
- எழுத்துணரி
- மின்னகராதி, இணைய வழி கலைக்களஞ்சியம், சொற்களஞ்சியம்,
- சொல்திருத்தி, இலக்கணத்திருத்தி, சந்திப்பிழைநீக்கி, உருபனியல், தொடரியல், பொருண்மையியல், உருவாக்கியல்
- தரவுச் சுரங்கம், தமிழ் தேடுபொறி போன்ற இயற்கை மொழி ஆய்வு

ஆகிய பொருண்மைகளிலும் இத்தலைப்புத் தொடர்பான வேறு கணினித்தமிழ் சார்ந்த பொருண்மைகளிலும் கட்டுரைகள் அமையப் பெறலாம்.

கட்டுரையாளர்கள் கவனத்திற்கு

- கட்டுரைகள் சொற்கோப்பில் (M.S.Word) அமையப் பெறுதல் வேண்டும்
- கட்டுரைகள் பொருண்மை சார்ந்ததாக அமைய வேண்டும்
- தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் எழுதப்பெறலாம்
- தமிழ் கட்டுரைகள் யுனிகோடு எழுத்துருவில் 11 அளவில் அமைதல் வேண்டும்
- ஆங்கிலக்கட்டுரைகள் Timees New Roman எழுத்துருவில் 12 அளவில் அமைய வேண்டும்.
- கட்டுரைகளை திருத்தவோ, சுருக்கவோ பதிப்புக்குழுவிற்கு உரிமை உண்டு
- கட்டுரைகள் கருத்தரங்கத்தில் வாசிப்பது கட்டாயமாகும்
- கருத்தரங்கில் கட்டுரை வாசிப்பதற்கு வெளிநாட்டுப் பேராளர்கள் இணைய வழியில் கலந்து கொள்ள வேண்டும்.

கட்டுரைகளை
indiatia2020@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புதல் வேண்டும்.

கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்
01/10/2023

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த மூன்று கட்டுரைகளுக்கு விருது வழங்கப்படும்.

நன்றி தமிழ் இணையக் கழகம் இணையத்தால் இணைவோம்.....
இணையத்தமிழ்மொழியை வளர்ப்போம்..